LIBRARY
02 JUN 2008
Eastern University, Sri Lanka

# EASTERN UNIVERSITY, SRI LANKA
## FACULTY OF COMMERCE & MANAGEMENT
## PART III EXAMINATION IN BBA/B.COM – 2001/02 (PROPER / REPEAT)

## EXTERNAL DEGREE PROGRAMME

## BBA / COM 402 Economic Development & Planning

ஒவ்வொரு பகுதியிலுமிருந்து இரண்டு வினாக்களுக்குக் குறையாமல் தெரிவு செய்து ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

### பகுதி 1

01. (அ) “அபிவிருத்திப் பொருளியலை” வரையறுக்க.

(04 புள்ளிகள்)

(ஆ) ஒரு சமூகம் கொண்டிருக்க வேண்டிய அபிவிருத்தியின் மூன்று இலக்குகளும் எவை?

(08 புள்ளிகள்)

(இ) அபிவிருத்தியினை மதிப்பிடுகின்ற மரபார்ந்த பொருளாதார அளவீடுகள் சிலவற்றை விளக்குக.

(08 புள்ளிகள்)

02. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் சில பொதுவான இயல்புகளை விளக்குக.

(20 புள்ளிகள்)

03. (அ) ஒரு நாட்டின் அளவுசார் (size) வருமானப் பங்கீடு, தொழிற்பாடுசார் (functional) வருமானப் பங்கீடு என்பவற்றை வேறுபடுத்திக் காட்டுக.

(08 புள்ளிகள்)

(ஆ) உலகளாவிய சூழல் முன்னேற்றம் தொடர்பாக அபிவிருத்தியடைந்த நாடுகளும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளும் பின்பற்றக்கூடிய கொள்கைத் தெரிவுகள் யாவை?

(12 புள்ளிகள்)

04. (அ) றொஸ்டோவின் வளர்ச்சிக் கோட்பாட்டில் விளக்கப்பட்ட விடுபடுகட்டத்தின் (take-off stage) பிரதான அம்சங்களை விளக்குக.

(08 புள்ளிகள்)

(ஆ) பொருளாதார வளர்ச்சி பற்றிய லூயிஸ் மாதிரியை சுருக்கமாக விபரிக்க.

(12 புள்ளிகள்)

## பகுதி 11

05. (அ) திட்டமிடலின் ஆறு அடிப்படை இயல்புகளும் யாவை?

(12 புள்ளிகள்)

(ஆ) குறைவிருத்தி நாடுகளில் திட்டமிடல் செயற்பாடுகளை நியாயப்படுத்தும் சந்தைத் தோல்வி வாதத்தினை விளக்குக.

(08 புள்ளிகள்)

06. (அ) குறைவிருத்தி நாடுகளின் தனியார் துறையில் காணப்படும் நான்கு வெவ்வேறுபட்ட தனிநபர் உடமைகளின் தன்மைகளை (Individual Ownership) விளக்குக.

(12 புள்ளிகள்)

(ஆ) அத்தகைய சூழலில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டமிடலின் அடிப்படை அம்சங்களை (principal components) இனங்கண்டு விளக்குக.

(08 புள்ளிகள்)

07. பொருளாதார திட்டமிடல் தொடர்பாகப் பின்வருவனவற்றை விளக்குக.

(அ) உள்ளீட்டு - வெளியீட்டு ஆய்வு

(ஆ) செலவு – நன்மை ஆய்வு

(20 புள்ளிகள்)

08. குறைவிருத்தி நாடுகளில் ஏற்படும் திட்டமிடல் தோல்விகளுக்கான பிரதான காரணங்கள் யாவை?

(20 புள்ளிகள்)

*************************